செ.வெ.எண்: 43 நாள்:25.06.2020

கரூர் மாவட்டம்

**கொரோனா வைரஸ் பரவாமல் இருக்க பொதுமக்கள் சமூக விலகலை கடைபிடிக்க வேண்டும். - தங்களை தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் - அத்தியாவசியப் பொருட்களை பதுக்கினாலோ, அதிக விலைக்கு விற்றாலோ கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - கரூர் மாவட்டத்தின் 18 எல்லைகளும் மூடப்பட்டுள்ளன - அனைவரும் சமூகப்பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் - மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் பேட்டி**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் முன்னிலையில் இன்று (25.03.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கரூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து சுகாதாரத்துறை, நகராட்சி, பேரூராட்சிகள், காவல்துறை, வருவாய்த்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுடன் துறைவாரியாக மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் விரிவாக ஆய்வு செய்தார்கள்.

பின்னர் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ள மேலான அறிவுரைகள், உத்தரவுகள் செயல்படுத்தப்பட்டுள்ள விதம் குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது.

வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து வந்த மக்களை எப்படி தனிமைப்படுத்துவது, மற்றவர்களுக்கு தொற்று பரவாமல் தடுப்பது, அத்தியாவசியப் பொருட்கள் தங்கு தடையின்றி பொதுமக்களுக்கு கிடைக்க வழிவகை செய்வது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து துறைவாரியாக அலுவலர்களுடனும், வர்த்தகர் சங்கம், மளிகைபொருட்கள் வியபாரிகள் சங்கம், பால்வியாரிகள் சங்கம், உணவக உரிமையாளர்கள் சங்கம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரிடமும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பாரதப்பிரதமர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆகியோர் அறிவுறுத்தியவாறு கரூர் மாவட்டத்தில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் சிறப்பாக எடுக்கப்பட்டு வருகின்றது. அத்தியாவாசியப் பணிகளுக்கு வரக்கூடிய பணியாளர்களுக்கு அடையாள அட்டை கொடுத்து பணிக்கு வரவைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேவையில்லாமல் பொதுமக்கள் நடமாட்டம் இருக்கக்கூடாது. மருந்துகள், மளிகைப்பொருட்கள், பால் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் தங்கு தடையின்றி பொதுமக்களுக்கு கிடைக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. வர்த்தகர் சங்கம், மளிகைபொருட்கள் வியாபாரிகள் சங்கம், பால்வியாபாரிகள் சங்கம், உணவக உரிமையாளர்கள் சங்கம் என அனைத்து தரப்பினரிடமும் இதுகுறித்து விரிவாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மருந்து, மளிகைப்பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை கரூர் மாவட்டத்திற்கு கொண்டு வருவதில் அவர்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் அதை செய்துகொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கின்றது.

மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொரோனா சிறப்பு சிகிச்சைப் பிரிவில் 15 நபர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள், வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருபவர்கள் 381 பேர். இதில், 294 நபர்கள் வெளிமாநிலங்களுக்குச் சென்று வந்தவர்கள், 87 நபர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர்கள். இவர்களின் வீட்டுக்கதவுகளில் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டப்பட்டுள்ளது. அனைவரும் அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு சுகாதாரத்துறை, வருவாய்த்துறை மற்றும் காவல்துறையினரால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். பிற மாவட்டங்களில் இருந்து கரூர் மாவட்டத்திற்குள் வரும் 18 எல்லைகளும் மூடப்பட்டுள்ளது. காவல்துறையினரும், வட்டாரப்போக்குவரத்துத்துறை அலுவலர்களும் தொடர்ந்து ரோந்து பணியில் இருப்பார்கள். தேவையில்லாத வாகனங்கள் வந்தால் அவை பறிமுதல் செய்யப்படும்.

வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முதல் கிராம நிர்வாக அலுவலர், கிராம ஊராட்சி செயலர் வரை அனைவரும் உஷார் நிலையில் பணியாற்றிக்கொண்டுள்ளனர். நகரப்பகுதி மற்றும் கிராமப்பகுதிகளில் வெளிநாடு அல்லது வெளிமாநிலங்களுக்குச்சென்று எவரேனும் வந்திருந்து உரிய மருத்துவப்பரிசோதனை செய்யாமல் இருந்தால் அவர்கள் குறித்த தகவலை சேகரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களும் தாமாக முன்வந்து இந்த தகவலை வட்டாட்சியருக்கோ, வட்டார

வளர்ச்சி அலுவலருக்கோ, வட்டார மருத்துவ அலுவலருக்கோ தெரிவிக்க வேண்டும். அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள 24 மணி நேர கட்டுப்பாட்டு அறைக்கு 04324-1077 என்ற கட்டணமில்லா தொலைபேசியிலோ அல்லது 04324-256306, 04324-255340 ஆகிய எண்களில் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம். மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறைக்கு 104 என்ற எண்ணிலும் தெரிவிக்கலாம்.

அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ளும் துப்புரவு பணியாளர்கள், மின்சார வாரிய ஊழியர்கள் உள்ளிட்ட பணியாளர்களுக்கு தேவைக்கு ஏற்ப தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் மூலம் தனியாக சிறப்பு பேருந்து வசதி ஏற்படுத்தித்தரப்படும். அந்த பேருந்து கிளம்பும்போதும், மீண்டும் பணிமனைக்கு சென்று சேரும்போதும் முழுவதும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு தூய்மைபடுத்தப்படும். அதேபோல அந்த பேருந்தில் ஏற்றப்படும் பணியாளர்கள் உரிய அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும். அவர்களின் கைகளில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு தகுந்த பாதுகாப்புடன் அழைத்துவரப்படுவார்கள். தமிழ்நாடு முழுவதும் இது நடைமுறைப்படுத்தப்படும்.

இதுவரைக்கும் கரூர் மாவட்டத்தில் யாருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்படவில்லை. கரூர் மாவட்டத்தில் போதிய முகக்கவசங்கள், கிருமி நாசினிகள் இருப்பில் உள்ளது. இந்த அசாதாரண சூழலை பயன்படுத்தி அத்தியாவசியப் பொருட்களை பதுக்குவோர் மீதும், அதிக விலைக்கு விற்பனை செய்வோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.1000 மற்றும் உணவுப்பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நியாயவிலைக்கடைகள், மருந்ததங்கள், காய்கறிகள், மளிகைப்பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை விற்பனை செய்யும் கடைகளின் வாசலில் சமூக விலகலை கடைபிடிக்கும் வகையில், இரண்டடிக்கு ஒரு கோடு போட்டு அந்த இடைவெளியில் பொதுமக்கள் நின்று பொருட்களை வாங்க வேண்டும் என்று அனைவருக்கும் அறிவுறுத்த கடை உரிமையாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. வர்த்தகர் சங்கத்தினரிடமும் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா என்ற கொடிய வைரஸ் பரவாமல் தடுக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் எடுத்து வருகின்றது. அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். கொரோனா வைரஸ் தாக்காத முன்னனி மாவட்டமாக கரூர் மாவட்டத்தை உருவாக்கத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முகப்பில் வைக்கப்பட்டிருந்த கை கழுவும் இடத்தில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தனது கைகளை சோப்பு போட்டு முழுமையாக கழுவி, சுகாதாரத்துறையினரால் கைகளில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு, எலக்ட்ரானிக் தெர்மா மீட்டர் மூலம் உடல் வெப்பத்தை பரிசோதனை செய்துகொண்டபிறகே கூட்ட அரங்கிற்குள் வந்தார். அதேபோல இன்று வருகைதந்த அனைவரும் கைகழுவி கிருமிநாசினியால் கைகளை சுத்தம் செய்த பிறகே அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இரா.பாண்டியராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராஜேந்திரன், குளித்தலை சார்ஆட்சியர் திரு.ஷே.ஷேக்அப்துல்ரக்மான்.இஆப., கரூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.வ.சந்தியா, அனைத்து வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வர்த்தகர் சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.